6. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐ தளர்த்தல்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 244-வது விதியின் கீழ், 41-வது விதி மூன்றுவது உட்பிரிவின் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதைத் தளர்த்த வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

7. கவன ஈர்ப்பு.

(அ) திண்டுக்கல் ஜி. டி. என். கலைக்கல்லூரியில் உண்ணு நோன்பு மேற்கொண்டிருந்த மாணவர் மீது தடியடி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்ற பிப்ரவரித் திங்கள், 11-ம் தேதி திண்டுக்கல் ஜி.டி.என். கலைக்கல்லூரியில் உண்ணு நோன்பு மேற்கொண்டிருந்த மாணவர்கள் மீது காவல்துறையினர் தடி யடி நடத்தியுள்ள அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 11—2—1969 அன்று வேலை நிறுத்தம் செய்த திண்டுக்கல் ஜி.டி.என். கலைக் கல்லூரி மாண வர்கள் சுமார் 400 பேர் கல்லூரிக்குள் கூட்டங்கூடி, அதற்கடுத்த வாரம் நடைபெறவிருந்த மாதிரித் தேர்வு நடைபெறக் கூடாதென கோரிக்கை விடுத்தனர். அவர்கள் வன்செயலில் ஈடுபடத் தொடங்கி பிற்பகல் 2-30 மணி அளவில் கற்களை வீசியெறியத் தொடங்கியதாக காவலர்களின் உதவியை நாடி கல்லூரி முதல்வர் எழுதிய வேண்டுகோள் அனுப்பினர். திண்டுக்கல் காவல் துறை உதவிக் கண்காணிப்பாளரும், காவலர் சிலரும் கல்லூரிக்கு விரைந்து வந்து, சிறு அளவில் தடியடி செய்து அமைதியை நிலைநாட்டினர். 11 மாணவர்களும் 3 காவலர்களும் காயமுற்றனர். இவர்கள் புறத்துள்ள பிணியாளர்களாக சிகிச்சை அளிக்கப்பட்டனர். மாணவர்கள் கற்களை வீசியெறிந்ததால், கல்லூரிக் கட்டடங்களிலும் விடுதிக் கட்டடங்களிலும் இருந்த குழல் விளக்குகள், கண்ணாடி சாளரங்கள் ஏனைய பொருள்கள் இவை நாசமுற்றன. கல்லூரி உடைமைக்கு 4,000 ரூபாய் அளவிற்குச் சேதம் ஏற்பட்டது.

இந்நிகழ்ச்சிக் குறித்து ஏ. எஸ். இளங்கோ மீதும் ஏனைய 18 மாண வர்கள் மீதும் இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் 147, 148, 149, 427, 332-வது பிரிவுகளின் கீழ் திண்டுக்கல் வட்டக் காவல் நிலையத்தில் 101/69 எண் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர்களில் 16 பேர் அந்த இடத்திலேயே கைது செய்யப்பட்டனர். எஞ்சிய மூவர், பிறகு கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மாணவர்கள், பின்னர் திண்டுக்கல் உட்கோட்ட குற்றவிசாரணை நீதிபதியால் பிணையத்தில் விடுவிக் கப்பட்டனர். இந்த நிகழ்ச்சி நடந்த பின்னர், கல்லூரி அதிகாரிகள் எப் பொழுது கல்லூரி பிறகு திறக்கப்படும் என்று தேதி குறிப்பிடாமல், கல்லூரி மூடப்பட்டதாக அறிவித்தனர். கல்லூரி 10—3—1969 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. இப்பொழுது அமைதி நிலவி வருகிறது.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : மதியம் ஒரு மணிவரையில் அமைதி யாக உண்ணுநோன்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும், அதற்குப் பின் னுல் அஸிஸ்டெண்ட் சூப்பரின்டெண்டெண்ட் ஆஃப் போலீஸ் தடியடி துவங்கிய பின்னர்தான் மாணவர்கள் பக்கத்திலிருந்து விரும்பத்தகாத எதிர் நடவடிக்கைகள் ஏற்பட்டது என்றும் எனக்குத் தகவல் வந்தி

ருக்கிறது. அஸிஸ்டென்ட் சூப்பரின்டென்டென்ட் ஆஃப் போலீஸ் அவர்கள் பின்னுல் மாற்றப்பட்டிருக்கிருர்கள் என்ற காரணத்திஞல் அது உண்மையாக இருக்கும் என்று நம்ப இடம் இருக்கிறது. அது ஒருபுற மிருக்க, 98 மாணவர்கள் இப்போது ஆர்பிட்டரரியாக வருடாந்திரப் பரிட்சைக்கு அனுப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிருர்கள். அதில் பலர் இறுதி வருடப் பரீட்சைக்குப் போகவேண்டியவர்கள். நடந்த சம்பவத்தை விட்டு விட்டு இந்த மாணவர்கள் பரீட்சைக்குப் போவதற்கு வேண்டிய வழி வகைகளைப் கல்வி அமைச்சர் அவர்களோடு கலந்து கொண்டு முதல் அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : காவலர்கள் தாங்களாகவே சென்று நடவடிக்கைகள் எடுத்ததாகக் கூறுவது சரியான தகவல் அல்ல. அது அவருக்கு வந்த தகவல் என்று குறிப்பிட்டார்கள். காவலர்களின் உதவியை நாடி கல்லூரி முதல்வர் எழுதிய வேண்டுகோள் அனுப்பினுர். அதன் பிறகுதான் காவலர்கள் கல்லூரிக்குள் சென்ருர்கள் என்றிருக்கிறது. மாணவர்களின் வருங்கால நிலைபற்றிக் குறிப்பிட்டார்கள். கல்வி அமைச்சர் அவர்களோடு கலந்து சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து ஆவன செய்யப்படும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : காவலர்கள் அழைக்காமல் சென்றதாகச் சொல்லவில்லை. முதல்வர் கடிதம் எழுதித்தான் அவர்கள் சென்ருர்கள் என்று சொல்லும் தகவலை ஏற்றுக்கொள்கிறேன். காவலர்கள் சென்ற பிறகுதான், தடியடி தொடங்கிய பின்னர்தான் எதிர் நடவடிக்கைகள் ஏற்பட்டன என்றுதான் நான் சொன்னேன் இப்போது கவனிக்க வேண்டியது வழக்குகள் இல்லாமல் பார்த்து அம் மாணவர்கள் பரீட்சைக்கு போவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இறுதிப் பரீட்சைக்கு போக வேண்டியவர்கள் இருக்கிருர்கள். அவர்களைப் பரீட்சைக்கு அனுப்பும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. இது தனியார் துறைக் கல்லூரி என்பதால் அவர்கள் விருப்பப்படி செய்வது பழி வாங்கும் ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, கல்வி அமைச்சர் அவர்களோடு கலந்து, முதல் அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : நிச்சயமாக அதில் கவனம் செலுத்தப்படும் என்ற உறுதியினை நான் அளிக்கிறேன்.

(ஆ) நெல்லிக்குப்பம் பாரி கம்பெனி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோதும், நெய்வேலி கார்ப்பொரேஷன் தொழிலாளர் ஊர்வலத்தின்போதும் காவல்துறையினர் எடுத்த நடவடிக்கை.

***திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, நான் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் தனிப்பட்ட இரண்டு சம்பவங்கள் பற்றி கொடுத்திருந்தேன். அந்த இரண்டையும் க்ளப் செய்து ஒரே தீர்மானமாக அனுப்பப்பட்டிருக்கிறது. இருப்பினும் அவற்றை தனித்தனியாகப் படிக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படித் திருத்திக் கொடுத்திருக்கிருர்களோ அப்படித்தான் படிக்க வேண்டும்.

திரு. சி. கோவிந்தராசன் : இது 10-ம் தேதி நடைபெறவில்லை. 19-ம் தேதி அன்று நடைபெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அச்சிட்டுக் கொடுத்ததைத்தான் நீங்கள் படிக்க வேண்டும்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, கடந்த சனவரித் திங்கள் 10-ம் தேதியன்று நெல்லிக்குப்பம் பாரி கம்பெனி தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளைப் பெற அமைதியான முறையில் வேலைநிறுத்தம்